தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ.15- மலர் 21- இதழ் 09- ஜனவரி 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

மகளிர் சுய உதவிக் குழுவினரின் பொங்கல் விழா கொண்டாட்டங்கள்...

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜனவரி 2020

அன்பு சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, இம்மாதம் உங்களுடன் எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விளைகிறேன்.

விவசாயிகள் தங்களுக்கு உதவும் இயற்கைக்கும், தங்களின் உற்ற நண்பனான கால்நடைகளுக்கும் தங்களின் நன்றியைத் தெரிவிக்கும் விதமாக கொண்டாடும் பொங்கல் பண்டிகையை உங்கள் சுற்றத்துடன் கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள்.

ஆடிப்பட்டத்தில் விதை விதைத்து, ஐப்பசியில் களை எடுத்து, கார்த்திகையில் கதிர் அறுத்து, உலகிற்கே உணவு படைக்கும் விவசாயப் பெருமக்களின் உழைப்பிற்கு மரியாதை செலுத்தும் வகையில் அவர்களைப் பாராட்டுவோம். உழவர்களின் நண்பர்களான கால்நடைகளைக் காத்திடுவோம். இயற்கையைப் போற்றிடுவோம்.

சுய உதவிக் குழு மகளிரும் இன்று விவசாயப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பெண் விவசாயிகள் என்ற சிறப்புடன் இருக்கின்றனர். உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்காத வகையில் இயற்கை முறையிலே உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது நம் விவசாய மகளிருக்கு மேலும் சிறப்பு சேர்ப்பதாக இருந்து வருகிறது. நம் அனைத்து சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த மகளிருக்கும் இவை பெருமை சேர்ப்பதாக உள்ளது.

பெண்களின் முன்னேற்றத்திலும், அவர்களின் நலனிலும் அதிக அக்கறை கொண்ட நம் தமிழக அரசு பெண்களுக்காக செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை எளிய முறையில் அனைத்து மகளிருக்கும் கொண்டு சேர்க்கும் ஒரு மாபெரும் பொறுப்பை நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஏற்று உள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் மகளிர் சார்ந்த பல்வேறு மகளிர் நலத் திட்டங்களின் செயல்பாடுகளை சுய உதவிக் குழு மகளிருக்கு பெற்றுத் தரும் ஓர் உன்னத பணியை 36 ஆண்டுகளாகத் தொடர்ந்து மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்ற வரிகளுக்கு ஏற்ப தை மாதம் பிறந்தாலே நல்வாழ்விற்கு வழி கிடைக்கும் என்பது தொன்று தொட்டு வரும் நம்பிக்கை. இது தொடர வேண்டுமாயின் நாம் அனைவரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வாயிலாக செயல்படுத்தி வரும் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்தி, அதனை மற்றவர்களுக்கும் தொடர்ந்து கிடைக்கும் வகையில் மகளிர் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை உங்கள் பகுதியிலே ஏற்படுத்த வேண்டும். அதற்கு நம் தமிழ்நாடு அரசும், மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் என்றும் துணை நிற்கும்.

இப்பொங்கல் திருநாள் முதல் உங்களின் வாழ்வு செழித்திடவும், அறியாமை இருள் அகன்று, இல்லாமை நீங்கி, அனைவருக்கு எல்லாமும் கிடைத்திடவும் மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் உழவர் திருநாள் மற்றும் கால்நடைகளுக்கான மாட்டுப் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

ச.ப.கார்த்திகா

மேலாண்மை இயக்குநர் (பொ)

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

குறளும்-பொருளும்

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

இந்த உலகம் பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருந்தாலும், ஏர் தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே எவ்வளவு துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே அனைத்திற்கும் முதன்மையானதாகவும், சிறந்ததாகவும் விளங்குகிறது.

உள்ளே...

ஊரக வளர்ச்சித்துறையின் சிறப்பான செயல்பாட்டிற்கு தேசிய விருதுகள் 05
அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா 07
தகைசால் தமிழர் திருநாள்... 11
கோலப் போட்டி 14
நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிக்கடன் அட்டை வசதி வழங்குதல் 15
சுற்றுச்சூழல் பாதுகாப்பு 18
மகளிர் சுய உதவிக் குழுவினரின் பொங்கல் விழா கொண்டாட்டங்கள்... 20
மகளிரின் வாழ்வில் மாற்றம் தந்த திட்டம் 26
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் பொங்கல் விழா 28
சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்புக் குறித்த ஒருநாள் பயிற்சி விளக்கக் கூட்டம் 32

→ முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் ஏப்ரல் மாதம் முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஏப்ரல் 2020 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஏப்ரல் 2020 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்இதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு **முற்றம்**

மலர் 21
இதழ் 09
ஜனவரி 2020
விலை ரூ.15

- **கௌரவ ஆசிரியர்கள்**

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ),
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**

எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

- **ஆசிரியர் குழு**

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

- **நிர்வாக ஆசிரியர்**

சி. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **நிதி நிர்வாகம்**

அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்**

கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்**
- **முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா**
- **பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
- **கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை 600 034.

தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

புவி பாதுகாப்பு ஆண்டு 2020

அன்புள்ள வாசகர்களுக்கு,

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். ஒவ்வொரு ஆண்டு பிறக்கும்போது புதிய சிந்தனையோடும், புதிய உத்வேகத்தோடும் நமது பணியினை தொடங்குவது வழக்கம். ஆண்டின் முடிவிற்குள் பல சாதனைகளையும், பல சோதனைகளையும் சந்திக்கின்றோம். இந்த 2020ம் ஆண்டு நமக்கு வெற்றி ஆண்டாக அமையும் எனும் நம்பிக்கையோடு புதிய ஆண்டில் அடியெடுத்து வைப்போம்.

ஐக்கிய நாடுகளின் சபை, இந்த ஆண்டை 'பிளாண்ட் ஹெல்த் ஆண்டு' என அறிவித்துள்ளது. அதாவது மனித குலம் சுகாதாரமாக வாழ வேண்டுமானால் நம்மை தாங்கி நிற்கும் பூமியும் சுகாதாரமாக இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம். இயற்கையான இந்த பூமி அழிந்து விடாமல் பாதுகாக்க மரங்களையும், செடிகளையும் நடுவோம். மண்ணுக்கு அடியில் நீரை சேமித்து வைப்போம். இயற்கையை முழுமையாக அழித்து விடாமல் தேவைக்கு மட்டுமே பயன்படுத்துவோம். பயன்படுத்திய அளவிற்கு ஈடாக மீண்டும் மீண்டும் பசுமையை உருவாக்கும் விதைகளை நடுவோம். அறிவியல் வல்லுநர்களும் உலக நாடுகளின் தலைவர்களும் இந்த பூமியை எவ்வாறு பாதுகாக்க வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும், அவைகளை செயல் வடிவில் கொண்டு வருபவர்கள் மக்களாகிய நாம்தான்.

கிராமப்புறங்களில் செயல்பட்டுவரும் சுய உதவிக் குழுக்களிலுள்ள உறுப்பினர்கள் பெரும்பாலும் விவசாய குடும்பங்களை சேர்ந்தவர்கள். அதோடு, அதிகமாக இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்பவர்கள். ஆண்டு தொடக்கத்தில், ஒவ்வொரு குழுவும் ஆண்டு செயல் திட்டம் தீட்டும் பொழுது பூமியை பாதுகாப்பதற்கான செயல்பாடுகளை சேர்த்து திட்டமிடுங்கள்.

இயற்கையை வழிபடுவதன் மூலம் விவசாயத்திற்கு உறுதுணையாக உள்ள சூரியனுக்கும் கால்நடைகளுக்கும் நன்றிகூறும் விழாவாக தமிழர்கள் அனைவரும் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடி வருகின்றோம். தமிழர்களின் அடையாளமான இந்த பொங்கல் விழாவில் நமது ஒற்றுமை பொங்கட்டும், மகிழ்ச்சி பெருகட்டும் மற்றும் பூமியின் சுகாதாரம் நிலைக்கட்டும் என முற்றம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

இப்படிக்கு,

எஸ். சின்னப்பன்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

ஊரக வளர்ச்சித்துறையின் சிறப்பான செயல்பாட்டிற்கு தேசிய விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம், 19.12.2019 அன்று புதுடெல்லியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அமைச்சர் திரு. நரேந்திர சிங் டோமர் அவர்களால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக வழங்கப்பட்ட 4 தேசிய விருதுகள் உட்பட ஊரக வளர்ச்சித் துறையின் சிறப்பான செயல்பாட்டிற்காக வழங்கப்பட்ட மொத்தம் 13 தேசிய விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ்வர்மா, இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை உயர்அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

தீனதயாள் உபாயத்யாய கிராமின் கவுசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதில் சிறப்பாக செயல்பட்டமைக்காக தேசிய தங்க விருது

2019ம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தியமைக்காகவும், தீனதயாள் உபாயத்யாய கிராமின்

கவுசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தமைக்காக தேசிய தங்க விருது என மொத்தம் 13 விருதுகளை மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அமைச்சர் திரு. நரேந்திர சிங் டோமர் அவர்களிடமிருந்து, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் 19.12.2019 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பெற்றுக் கொண்டார்.

இவ்விருது வழங்கும் நிகழ்ச்சியில், மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி அவர்கள், மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை செயலாளர் திரு. அமர்ஜித் சின்ஹா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பயிற்சி) கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைமை இயக்குநர் திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் டாக்டர் கே. எஸ். பழனிச்சாமி, இ.ஆ.ப., மற்றும் கூடுதல் இயக்குநர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

46வது சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி துவக்க விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், 22.12.2019 அன்று சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற 46வது சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2019–2020யை தொடங்கி வைத்தார்கள். உடன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அஷோக் டோங்ரே, இ.ஆ.ப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் சுற்றுலா இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

பணிக்குச் செல்லும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா

பணிக்குச் செல்லும் மகளிரின் சிரமங்களைக் களைந்திடும் வகையில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த, மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டம் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இலட்சக்கணக்கான பெண்கள் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனத்தினை பெற்றுள்ளனர்.

கோயம்புத்தூர் மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றுக் கொண்டு 1261 பயனாளிகளுக்கு ரூ.5.85 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இம்முகாமில், மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் பணிக்குச் செல்லும் பெண்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட ஆட்சியர் திரு. கு. ராசாமணி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ரமேஷ்குமார், வருவாய் கோட்டாட்சியர் திரு. சுரேஷ், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. செல்வராசு மற்றும் பிறதுறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம்

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்ட லாரி உரிமையாளர்கள் சங்க திருமண மண்டபத்தில் 66வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திரு கா. மெகராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் விவசாயிகள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட 4,915 பயனாளிகளுக்கு ரூ. 40.07 கோடி கடனுதவி மற்றும் 107 உழைக்கும் மகளிருக்கு ரூ. 26,75,000 மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்களும், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர். வெ. சரோஜா அவர்களும் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இயக்குநர், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. மணி, பல்வேறு துறை அரசு அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்தில் 20.11.2019 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமை வகித்து, நலத்திட்ட உதவிகள் மற்றும் பணிக்குச் செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. இன்னொசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள், நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர், பல்வேறு துறை அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம்,

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தனபால் கல்யாண மண்டபத்தில், உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் மற்றும் மானியம் வழங்கும் விழா 20.11.2019 அன்று நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு, 200 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் மற்றும் மானியத் தொகையினை வழங்கினார். இவ்விழாவில் செய்யாறு சட்ட மன்ற உறுப்பினர் திரு. தூசி மோகன், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பெ. சந்திரா மற்றும் அரசு அலுவலர்கள், சுய உதவிக் குழுவினர், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம்

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற முதலமைச்சரின் சிறப்பு மனுநீதி நிறைவு நாள் விழாவில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையிலான அம்மா இருசக்கர வாகனங்கள் 20.11.2019 அன்று மேல மாத்தூர் ஊராட்சியிலும், 21.11.2019 அன்று பெரம்பலூர் மற்றும் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியங்களிலும் வழங்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன், அவர்கள் கலந்து கொண்டு, மானிய விலையிலான அம்மா இருசக்கர வாகனங்கள் உட்பட ரூ.1 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 572 பயனாளிகளுக்கு வழங்கினார். விழாவில் மாவட்ட ஆட்சியர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. ச. தெய்வநாயகி, ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு. தேவநாதன் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம்

கூட்டுறவு வார விழா

கூட்டுறவு வார விழா 16.11.2019 அன்று சிவகங்கை ராஜ் மஹாலில் நடைபெற்றது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் ராஜூ அவரகள், மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில் துறை அமைச்சர் ஜி. பாஸ்கரன் அவர்கள் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆப., ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி நேரடிக் கடன் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கி பெருங்கடன் உட்பட மொத்தம் ரூ.4.69 கோடி கடன் வழங்கப்பட்டது.

மேலும் கூட்டுறவு வார விழாவினையொட்டி அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பொருட்களை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டனர். இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு. க. அருண்மணி, உதவித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்டம்

மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தரும் நோக்கில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு ஆகியவற்றை வேலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டும் மையம் ஆகியவை இணைந்து நடத்தின.

வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 16.11.2019 அன்று நடைபெற்ற இம்முகாமில் 3608க்கும் மேற்பட்ட வேலைநாடும் நபர்கள் மற்றும் 82க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு பத்திர பதிவுத் துறை அமைச்சர் திரு. கே.சி.வீரமணி அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல் அவர்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு), திரு. வே. விஷ்ணு, இ.ஆ.ப., ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட இந்த வேலை வாய்ப்பு முகாமில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றிட தேர்ந்தெடுக்கப்பட்ட 892 நபர்களுக்கு மாண்புமிகு பத்திர பதிவுத் துறை அமைச்சர் திரு. கே.சி.வீரமணி அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல் அவர்களும் பணி நியமன ஆணைகளை வழங்கினர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி நேரடிக் கடன் வழங்கும் விழா

சிவகங்கை மாவட்டம்

மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாம் மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில் துறை அமைச்சர் ஜி. பாஸ்கரன், மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் 7 ஒன்றியங்களில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.11.38 கோடி வங்கி நேரடிக் கடன், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன், சமுதாய முதலீட்டு நிதி மற்றும் பணிக்குச் செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் ஆகியவை வழங்கப்பட்டன. இவ்விழாவில் சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு. க. அருண்மணி, உதவித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

▸ *திருவள்ளூர் மாவட்டம்*

திருவள்ளூர் நகராட்சி மற்றும் ஆவடி நகராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் திறப்பு

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் ஒரு பகுதியாக நகர்ப்புற மக்களின் சேவைகளைப் பூர்த்தி செய்யவும், பல்வேறு தொழில்களின் சேவைகளை ஒருங்கிணைக்கவும், நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதன்படி திருவள்ளூர் நகராட்சியில் (உழவர் சந்தை எதிரில்) அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற வாழ்வாதார மையத்தை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பெஞ்சமின் அவர்களும், ஆவடி மாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற வாழ்வாதார மையத்தை மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன் அவர்களும் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சிகளில் திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார், திருவள்ளூர் நகராட்சி ஆணையாளர் திருமதி. மாரிச்செல்வி, மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர் திரு. மணிவண்ணன், முன்னோடி வங்கி மேலாளர் ஹெவ்சார் ரஹ்மான், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை மைய மேலாளர், சமுதாய அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் மற்றும் பணிக்குச் செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா

புதுக்கோட்டை மாவட்டத்தில் 29.11.2019 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் திரு. சி. விஜயபாஸ்கர் அவர்கள் கலந்து கொண்டு, 328 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ. ஒரு இலட்சம் வீதம் ரூ. 3.28 கோடியும், 327 உழைக்கும் மகளிருக்கு ரூ. 81,75,000/ மதிப்பிலான மானிய விலையிலான அம்மா இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. அ. லலிதா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தனியார் நிறுவனங்களில் பணியாற்ற பணி நியமன ஆணைகள் வழங்குதல்

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வட்டார அளவிலான வேலை வாய்ப்பு முகாம் 16.11.2019 அன்று ஓமலூரில் உள்ள பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமில் ஓமலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வெற்றிவேல் அவர்கள், சேலம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குனர் திரு. சா. செல்வகுமார், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் ஓமலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

2100 வேலை நாடும் நபர்கள் கலந்து கொண்ட இம்முகாமில் 52 தனியார் நிறுவனங்கள் பங்கேற்று தங்கள் நிறுவனத்திற்குத் தேவையான நபர்களைத் தேர்வு செய்தன. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட 679 நபர்களுக்கு ஓமலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பணி ஆணைகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

தகைசால் தமிழர் திருநாள்...

நாம் பல்வேறு திருவிழாக்களை கொண்டாடி மகிழ்ந்தாலும், தை மாதத்தில் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகைதான் சிறப்பு வாய்ந்ததாகும். அந்த நான்கு நாட்களும் மாநகரங்களில் இருந்து பட்டிதொட்டி வரை ஊரே மகிழ்ச்சித் திருவிழாவாகத்தான் இருக்கும். ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் தொடங்கி போட்டி பந்தயம், உறவினர்கள் கூடுதல் என ஒவ்வொரு நாளும் உற்சாகம் களைகட்டும்.

பொங்கல் விழாவிற்கு தமிழர் திருநாள் என்கிற செல்லப்பெயரும் உண்டு. உண்மையை சொல்லப் போனால் உழவுத் தொழிலுக்கு மரியாதை செலுத்தும் உழவர் திருநாள் இது. என்றைக்கு நாம் பயிர் தொழில் ஆரம்பித்தோமோ அன்றைக்கே இவ்விழாவும் வெவ்வேறு வடிவங்களில் ஆரம்பமாகி விட்டது.

ஆடியில் விதை விதைத்து, அதை ஆறு மாதம் கழித்து அறுவடை செய்யும் உழவர்கள், தை முதல் தேதியில் உழவுக்கு உதவியாய் இருந்த இயற்கைக்கு நன்றி சொல்கிறார்கள். இதை ஒட்டி உருவானதே, 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்கிற பழமொழி.

வானியல் சாஸ்திரப்படி சூரியனின் சஞ்சாரத்தை அடிப்படையாக வைத்தே ஒவ்வொரு தமிழ் மாதப் பிறப்பும் நிர்ணயம் செய்யப்படுகிறது. கடவுள் இல்லை என்பவர்கள் கூட வணங்கும் ஒரே தெய்வம் சூரியன். இவர் தனுர் ராசியிலிருந்து மகர ராசிக்கு மாறும் நாளில் தான் தை மாதம் பிறக்கிறது. இதிலிருந்து உத்திராயண புண்ணிய காலம் ஆரம்பமாகிறது. உத்திராயணம் என்பதற்கு வடக்கு நோக்கி நகர்தல் என்று பொருள். கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் மறைந்தாலும், இன்று முதல் அவருடைய சஞ்சாரம் சற்றே வடக்கு நோக்கி சாய்ந்திருக்கும் என்கிறது வானியல்.

தை முதல் தேதியில் தமிழர் திருநாள் ஆரம்பித்தாலும், மார்கழி மாத இறுதியிலேயே 'போகிப் பண்டிகை' கொண்டாட்டமாக பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. பழையனவற்றை போக்கியதால் போக்கி என்றழைக்கப்பட்டு பின்னாட்களில் போகி என உருமாறியது. இந்நன்னாளில், மனதிற்குள் இருக்கும் குப்பைகளை அகற்றி மனதை சுத்தப்படுத்த வேண்டும் என்பதே இவ்விழாவின் தாத்பர்யம். போகி அன்று வீட்டின் கூரையில் 'பூலாப்பூ' என்கிற ஒருவகை பூவை செருகி வைக்கும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது.

தமிழர் திருநாளாகிய பொங்கலை மற்ற மாநிலத்தவர்கள் மகர சங்கராந்தியாக கொண்டாடுகிறார்கள். அதே சமயம் அறுவடை திருநாள் எனவும் இவ்விழா அழைக்கப்படுகிறது. குஜராத் மற்றும் ராஜஸ்தானில் இப்பண்டிகை உத்தராயன் என்கிற பெயரிலும், பஞ்சாப் மற்றும் ஹிமாச்சல பிரதேசத்தில் லோரி என்றும் கொண்டாடப்படுகிறது.

இந்தியாவிற்கு அப்பாலும் பொங்கல் பண்டிகை களைகட்டுகிறது. இந்தோனேசியா, தாய்லாந்து, இலங்கை, நேபாளம், மியான்மர், லாவோஸ் போன்ற நாடுகளிலும் வேறு பெயர்களில் இப்பண்டிகை அழைக்கப்படுகிறது. தமிழர் திருநாளை தமிழ் புத்தாண்டாக பாவிக்கிறார்கள் இலங்கை மக்கள்.

உழவு தொழிலுக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும் மாடுகளுக்கு நன்றி சொல்லும் நன்நாளே மாட்டுப் பொங்கல். இத்தினத்தன்று முறைமாப்பிள்ளை மீது மஞ்சள் நீர் தெளிப்பது தமிழக கிராமங்களில் இன்றும் வழக்கத்தில் உள்ளது. தென் மாவட்டங்களில் ஜல்லிக்கட்டு என்னும் மாடுபிடி விளையாட்டு இந்நாளில் நடைபெறும். கொல்லேறு தழுவுதல், மஞ்சு விரட்டு என்கிற பெயர்களும் இவ்வீரவிளையாட்டிற்கு உண்டு. முன்பு, இந்திய நாணயமாகிய சல்லிக் காசுகளை மாடுகளின் கொம்பில் கட்டி வைத்திருப்பார்கள். மாட்டை அடக்குபவர்களுக்கே அந்த காசு பரிசளிக்கப்படும். இந்த சல்லிக்காசே பின்பு ஜல்லிக்கட்டாக மாறி அழைக்கப்பட்டது. வேலி ஜல்லிக்கட்டு, வாடிவாசல் ஜல்லிக்கட்டு, வடம் ஜல்லிக்கட்டு என இதற்கு பல பெயர்கள் உண்டு.

உலகப் பொதுமறை நூலாகிய திருக்குறளை தமிழுக்கு தந்ததால் திருவள்ளுவரை சிறப்பிக்கும் வகையில் இன்றைய தினம் திருவள்ளுவர் தினமாகவும் அழைக்கின்றோம். பெண்களின் மாங்கல்ய பலத்திற்காகவும், உடன்பிறந்தோரின் நலனுக்காகவும் கனுப்பண்டிகை என்னும் விசேஷ நிகழ்வு மாட்டுப் பொங்கல் அன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது.

தமிழர் திருநாளின் இறுதியில் வருவது காணும் பொங்கல். இன்றைக்கு உறவுகளும் நட்புகளும் சங்கமித்து மகிழ்ந்து பொங்கல் பண்டிகைக்கு விடை கொடுக்கிறார்கள். இக்காணும் பொங்கலை கன்னி பொங்கல், கன்று பொங்கல் எனவும் அழைக்கப்படுகிறது. திருமணமாகாத பெண்களுக்காக கன்னி பொங்கலும், ஆண்களுக்காக கன்று பொங்கலும் வைத்து, கூடிய விரைவில் மேளச்சத்தம் கேட்க வேண்டுமென வேண்டிக் கொள்கிறார்கள்.

இத்தனை சிறப்புக்கள் கொண்ட தமிழர்களின் கலாச்சார விழாவை நாம் இனிதே கொண்டாடி மகிழ்வோம்.

தமிழக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனை அரங்குகள்

இந்தியத் தலைநகர் புதுடெல்லி பிரகதி மைதானத்தில் 2019 நவம்பர் 14 முதல் 27 வரை இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி (IITF) மற்றும் கிராமப்புற தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்திற்கான கவுன்சில் (CAPART) மூலம் நடத்தப்படும் கண்காட்சி ஆகியவை நடைபெற்றன.

இக்கண்காட்சிகளில் தமிழக அரசின் சார்பாக அமைக்கப் பெற்ற அரங்குகளில் விருதுநகர், திருநெல்வேலி, திருவாரூர், ஈரோடு, விழுப்புரம், மதுரை, நீலகிரி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் தாங்கள் உற்பத்தி செய்த தமிழகத்தின் சிறப்பு மிக்க சணல் பொருட்கள், மரப்பொருட்கள், பாய் பொருட்கள், இயற்கை உணவுப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், கைத்தறி ஆடைகள் மற்றும் செயற்கை ஆபரணங்களை 10 அரங்கில் பார்வைக்கு வைத்து விற்பனை செய்தனர்.

இக்கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழக சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் விற்பனை அரங்குகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள், தமிழ்நாடு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அலுவலர்கள் பார்வையிட்டு, தமிழக சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தனர்.

இக்கண்காட்சிகளில் நம் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்கள் ரூ. 11 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நபார்டு கிராமியத் திருவிழா விற்பனைக் கண்காட்சி

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு), தமிழ்நாடு மண்டல அலுவலகம் சார்பில், சென்னை நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 2019 டிசம்பர் 12 முதல் 15 வரை நான்கு நாட்கள் நடைபெற்ற நபார்டு கிராமிய திருவிழாவினை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் டிசம்பர் 12ஆம் தேதி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழக அரசின் கைத்தறி, கைவினை, ஜவுளி மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் திரு. வி. வி. ஷெனாய் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்தனர்.

சுவையான தேங்காய்ப்பால் காய்கறி சாதம்

நாம் உண்ணும் உணவுதான் நம் உடலுக்கு உறுதியையும், அழகையும் தருகிறது. சுவையும் சத்தும் மிகுந்த உணவுகளை அனைவரும் விரும்பிச் சாப்பிடுவார்கள். சுவை நிறைந்த தேங்காய்ப் பால் காய்கறி சாதம் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடும் உணவாகும்.

தேவையானப் பொருட்கள் :

▪பிரியாணி அரிசி: 1 டம்ளர், ▪பீன்ஸ், கேரட், காலி பிளவர், பச்சைப் பட்டாணி, உருளைக் கிழங்கு: தேவைக்கேற்ப, ▪ நெய்: 2 டேபிள் ஸ்பூன், ▪ பெரிய வெங்காயம் 2, ▪ முந்திரிப் பருப்பு: 20, ▪ கிராம்பு: 6, லவங்கப்பட்டை: 6, ▪ஏலக்காய்: 6, ▪வெள்ளைப் பூண்டு உரித்தது: 6 பல்லு, ▪பெரிய தேங்காய்: 1/2 மூடி, ▪பச்சை மிளகாய்: 2, ▪ உப்பு: தேவையான அளவு

செய்முறை :

முதலில் காய்கறிகளைச் சிறிய துண்டுகளாக நறுக்கி திட்டமான பதத்தில் தண்ணீர் ஊற்றி வேக வைத்துக் கொள்ளவும். பின்னர் தேங்காயை துருவிப் பால் எடுத்துக் கொண்டு, கிராம்பு, பட்டை, ஏலக்காயை அம்மியில் பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் வெங்காயம், பச்சை மிளகாய் நறுக்கி அனைத்தையும் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அடி கனமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து நெய் ஊற்றி காய விடவும். அதனுள் முந்திரி, நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், பூண்டு ஆகியவற்றை போட்டு பொன்னிறமாக வதக்கவும். அம்மியில் வைத்து பொடித்தவை மற்றும் தேங்காய் பாலுடன் 2 1/2 டம்ளர் தண்ணீர் விட்டு கொதிக்க விடவும்.

அதன் பின்னர் கழுவி சுத்தம் செய்து வைத்துள்ள அரிசியை போடவும். தீயை சிம்மில் வைத்து நிதானமாக எரிய விடவும். அரிசி வெந்ததும் வேக வைத்த காய்கறி, உப்பு சேர்த்து கிளறி இறக்கவும். இதற்கு தக்காளி தொக்கு அல்லது தயிர் பச்சடி பொருத்தமாக இருக்கும். தற்போது ருசியான தேங்காய்ப்பால் காய்கறி சாதம் ரெடி.

வயிற்றில் உள்ள பூச்சிகளை அழிக்கும்
சுண்டைக்காய்

சுண்டைக்காய் பெரிய வகை செடி இனத்தை சேர்ந்தது. 5 முதல் 10 அடி உயரம் வரை வளரும். காடுகளில் தானாகவே வளருவதை மலை சுண்டை என்றும், தோட்டங்களில் நாம் வளர்ப்பதை பால் சுண்டை என்றும் அழைக்கிறோம். பால் சுண்டையை பற்றிதான் இதில் காண இருக்கிறோம். இந்த சுண்டைக்காய் சிறியதாக இருந்தாலும் இதில் அதிக மருத்துவ குணம் உள்ளது.

ஆஸ்துமா, வறட்டு இருமல், மார்புசளி, காசநோய் தொந்தரவு இருப்பவர்கள், தினம் இருபது சுண்டைவற்றலை சிறிது நல்லெண்ணெயில் வறுத்து சாப்பிட்டு வந்தால் நோய் கட்டுப்படும். இது வயிற்றில் உள்ள பூச்சிகளை நீக்கும் இயல்புடையது. மூலத்தில் ஏற்படும் கடுப்பு, மூலச்சூடு மற்றும் வயிற்று கோளாறுகளுக்கும் சிறந்த மருந்தாகிறது. சுண்டைக்காயில் வைட்டமின் பி மற்றும் சி சத்து அதிகம் உள்ளது. 100 கிராம் காயில் 22.5 மி.கி. இரும்பு சத்தும், 390 மி.கி. கால்சியமும், 180 மி.கி. பாஸ்பரசும் உள்ளது.

பள்ளி செல்லும் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரிடையே ஊட்டச்சத்து பற்றாக்குறை நிலவி வருகிறது. இதை போக்க சுண்டைக்காய் உதவும். குழந்தையாக இருக்கும்போதே அவர்களுக்கு சுண்டைக்காயை உணவில் சேர்த்து, சாப்பிட பழக்க வேண்டும். இதை மாதம் இருமுறை உணவில் சேர்த்துக் கொண்டால், வயிற்றில் உள்ள பூச்சிகள் அழிந்துவிடும். மூல நோய் உள்ளவர்கள் ஒரு கைபிடி அளவு சுண்டைக்காயை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் மூலத்தில் உள்ள கடுப்பு நீங்கும். மூல நோயால் உண்டாகும் ரத்தக் கசிவும் நீங்கிவிடும்.

தவறான உணவுப் பழக்கம் காரணமாக பலர் வயிறு சம்பந்தபட்ட நோய்களால் துன்பப்படுகிறார்கள். அமீபியாஸ் என்ற வயிற்று நோயால் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மலச்சிக்கலும், அதிக மலப் போக்கும் மாறி மாறி தொந்தரவு செய்யும். புளித்த ஏப்பம், உடல் சோர்வு, மூட்டுவலி போன்றவைகளும் தோன்றும். இதனால் மனசோர்வு ஏற்படும். இத்தகைய நோயாளிகளுக்கு சுண்டைக்காய் சிறந்த மருந்து. உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சுண்டை வற்றல் சூரணத்தை தினம் ஒரு தேக்கரண்டி மோரில் கலந்து ஒரு மாதம் காலை, மாலை சாப்பிட்டு வந்தால் தொல்லை தரும் வயிற்று நோய்களில் இருந்து விடுபடலாம். சுண்டைக்காய் சிறுநீரை பெருக்கும் தன்மைகொண்டது. கல்லீரல், மண்ணீரல் நோய்களையும் நீக்க உதவுகின்றது. இதில் உள்ள கசப்பு தன்மை ரத்தத்தை சுத்தம் செய்வதோடு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகப்படுத்தும். சர்க்கரை நோயாளிகள் உணவில் சுண்டைக்காயை அடிக்கடி பயன்படுத்தினால் ரத்தத்தில் சர்க்கரை அளவு குறையும். சுண்டைக்காய் கிடைக்காத காலங்களில் சுண்டை வற்றலை பயன்படுத்தலாம்.

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களிடையே நடைபெற்ற கோலப் போட்டி

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்தியபிரதா சாஹூ, இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் 03.01.2020 அன்று மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே கோலப்போட்டி நடைபெற்றது. இக்கோலப்போட்டியில் 46 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு, பூக்கள், தானியங்கள், வண்ணப் பொடிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பல்வேறு வகையிலான கோலங்களை போட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக கரகாட்டம், சிலம்பம், பறையாட்டம் உள்ளிட்ட கிராமிய இசை வடிவிலான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தொடர்ந்து, கோலப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்தியபிரதா சாஹூ, இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளையும், கோலப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இணை தேர்தல் அதிகாரி திரு. வி. மணிகண்டன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. சி. கே. வீரணன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பொது மேலாளர் திருமதி. சி. சந்தோஷினி சந்திரா, பல்வேறு அரசு அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிக்கடன் அட்டை (மிகை பற்று) வசதி வழங்குதல்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக, நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிக் கடன் அட்டை மிகை பற்று (Over Draft) வசதி, முன்னோடி திட்டமாக சென்னை மெரினா, பட்டினப்பாக்கம் மற்றும் பெசன்ட் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 14 தெருவோர வியாபாரிகளுக்கு ரூ. 10,000/ மிகை பற்றுடன் கூடிய கடன் அட்டைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமை செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குனர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் சென்னை தலைமை செயலத்தில் 10.01.2020 அன்று வழங்கப்பட்டது.

இக்கடன் அட்டை வழங்கியதன் வாயிலாக, தெருவோர வியாபாரிகள் கந்து வட்டி மற்றும் பிறரிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்குவது தவிர்க்கப்படுகிறது. மேலும் அவர்களுக்குத் தேவையான நேரத்தில் பணத்தை எடுக்கவும், திரும்ப செலுத்தவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குனர் திருமதி. பாரிஜாதம், சென்னை நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திரு. தியாகராஜன், மாநில வல்லுனர் (FI), திரு. கே. மூர்த்தி, ICICI வங்கி நிர்வாகிகள் திரு. கிருஷ்ணன், திரு. முத்தையன், திரு. சரவணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சேலம் மாவட்டம், ஏற்காடு மலைவாழ் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம்

சேலம் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், ஏற்காடு வட்டாரத்திற்குட்பட்ட வேலைக்கு செல்லும் பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகன திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் 19.11.2019 அன்று ஏற்காடு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடத்தப்பட்டது.சேலம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சா. செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஏற்காடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. கு. சித்ரா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தி,

500க்கும் மேற்பட்ட பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகன திட்ட விண்ணப்பங்களை வழங்கினார். சேலம் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு. தாமோதரன் அவர்கள் பழகுநர் உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமம் பெற விண்ணப்பிப்பது குறித்து விளக்கவுரை ஆற்றினார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் கணினி மூலம் 55 நபர்களுக்கு பழகுநர் உரிமம் பெற Online-ல் பதிவிடப்பட்டது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலம் அம்மா இருசக்கர வாகன பயனாளிகளுக்கு குறைந்த வட்டியிலான வங்கிக் கடன் வழங்கவும் வழிவகை செய்து கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளும் சேலம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல்படி, உதவி திட்ட அலுவலர்கள், ஏற்காடு வட்டார இயக்க மேலாண்மை அலகு வட்டார மேலாளர், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் சிறப்பாக செய்யப்பட்டிருந்தது.

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக ஊரகப் பகுதிகளில் உள்ள இளைஞர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் வண்ணம் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டம் (DDU-GKY) செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான மாபெரும் வேலைவாய்ப்பு மேளா 23.11.2019 அன்று நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்றது. கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. பிச்சை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த வேலைவாய்ப்பு மேளாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, தனியார் நிறுவனங்களில் பணியாற்றத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி ஆணைகளை வழங்கினார்.

இந்த வேலைவாய்ப்பு மேளாவில் 60 தனியார் நிறுவனங்களும், வேலைவாய்ப்பு வேண்டி 1837 இளைஞர்களும் கலந்து கொண்டனர். அதில் 472 நபர்கள் தனியார் நிறுவனங்களில் பணியாற்ற தேர்வு செய்யப்பட்டனர். வேலைவாய்ப்பு மேளாவில் பணியாணை பெற்ற இளைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக மரக்கன்றுகள் மற்றும் துணிப்பைகள் வழங்கப்பட்டன.

இளைஞர்களுக்கு பணி நியமன ஆணை வழங்குதல்

நாமக்கல் மாவட்டத்தில் படித்து வேலையில்லாத இளைஞர் இளம் பெண்களுக்கு DDU-GKY திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலை வாய்ப்பு முகாம், 09-01-20 அன்று மல்லசமுத்திரம் வட்டார சேவை மைய வளாகத்தில் நடைபெற்றது.

இம்முகாமில் கலந்து கொண்ட 335 நபர்களில் 131 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களில் 126 நபர்களுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணி வாய்ப்பிற்கான பணி நியமன ஆணைகளை, நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. மணி அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உதவி திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் 36ஆம் ஆண்டு நிறைவு விழா

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 09.12.2019 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் 36ஆம் ஆண்டு நிறைவு விழா ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையிலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) திருமதி. ச. பா. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. உடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள், பல்வேறு திட்டங்கள் தொடர்பாக நடைபெற்ற விழிப்புணர்வு நாடகங்கள் நடைபெற்றது..

காஞ்சிபுரம் மாவட்டம்

மாவட்ட அளவிலான வங்கி மேலாளர்களுக்கான கடன் இணைப்பு கருத்தரங்கு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட அளவில் வங்கி மேலாளர்களுக்கான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு குறித்து திட்ட விளக்க கருத்தரங்கு 09.01.2020 (வியாழக்கிழமை) அன்று செங்கல்பட்டில் உள்ள ஸ்ரீ கணேஷ் பவன் ஓட்டலில் உள்ள கூட்ட அரங்கில் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சீனிவாச ராவ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் முன்னோடி வங்கி மேலாளர், உதவி திட்ட அலுவலர்கள், RSETI நிதியில் கல்வி பயிற்றுநர், பல்வேறு வங்கிகளை சார்ந்து கிளை மேலாளர்கள், மகளிர் திட்ட வட்டார மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். மேலும் 2019-20 ஆம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை குறித்த காலத்தில் முடிக்க வேண்டுமென அனைத்து வங்கியாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. வங்கி கடன் இணைப்பு வழங்கப்படும் விவரங்களை (NRLM Bank Linkage Portal) இணையதளத்தில் (daynrlmbl.aajeevika.gov.in) பதிவு செய்வதின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. குழுக்களுக்கு வங்கி கடன் வழங்கும் போது அதை தகுந்த பொருள் குறியீட்டில் (SHG Product Code) குறிப்பிடுவதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கப்பட்டது.

குப்பைகளை தரம் பிரிப்பது, மட்காத குப்பைகளை மறுசுழற்சி செய்வது அல்லது அதன் தேவைகளை குறைக்க முற்படுவது, மண்ணில் மட்காத பொருளை ஒரு நாளும் ஊக்குவிக்காமல் தவிர்ப்பது போன்ற செயல்களை அன்றாட வாழ்வில் நாம் கடைபிடிக்க வேண்டும்.

இவ்வுலகில் பிறக்கும் போது நாம் அனைவரும் நல்லவர்களாகவே பிறக்கின்றோம். நாளடைவில் நமக்குள் கனவுகள், இலட்சியங்கள், ஆசைகள் தோன்றுகின்றன. அவற்றை அடைய இந்த உலகு நமக்கு பயன்படுகிறது. மனிதர்களாகிய நம்மை, நம் முன்னோர்களை வளர்த்தெடுத்த இப்பூமியின் நிலம், நீர், காற்று ஆகியவற்றை பாதுகாக்க மறந்து விடுகிறோம். எனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பை நம் வாழ்வின் முதன்மையான கடமையாக கருத வேண்டும்.

தொழிற்புரட்சி ஏற்பட்ட பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்துதான் இவ்வுலகின் சுற்றுச்சூழல் மாசுபட தொடங்கியது என்பது அனைவரும் அறிந்ததே. கண்டுபிடிப்புகள் நம் வாழ்வை எளிமையாக்கியது. அதிக வாழ்நாட்களைத் தந்தது. மக்கள் பெருக்கத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தியது, இந்த தொழிற்புரட்சி பல்வேறு நன்மைகளைத் தந்தாலும் சுற்றுபுறச்சூழல் பாதிப்பையும் ஏற்படுத்தி உள்ளது. சுற்றுப்புறம் எவ்வாறு மாசுபடுகிறது? அதை பாதுகாப்பது எப்படி? என்பதை பார்ப்போம் வாருங்கள்.

நீர்நிலைகளும் மாசுபாடும்

உலகத்தில் நான்கில் மூன்று பங்கு நீராயினும், மனிதர்களுக்கும், உயிர்களுக்கும் கிடைக்கும் நீரின் அளவு குறைவான சதவிகிதமே. நீரானது இயற்கையின் சுழற்சியில் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நமது அறியாமையினாலும் அலட்சியத்தினாலும் நீரின் சுழற்சியை தடை செய்து அதன் தூய்மையையும் மாசுபடுத்துகிறோம்.

நீரினைப் பயன்படுத்துவதில் சிக்கனம்

தேவைக்கு மிகுதியாக தண்ணீர் இருப்பினும் அளவிற்கு மீறி அதைப் பயன்படுத்த மாட்டேன் என்ற உறுதியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏரி, குளம், குட்டை, நீரூற்று, நீரோடை, ஆறு போன்ற நீர் ஆதாரங்களை மாசுபடுத்துவது தவறான செயல் என்று குழந்தைகளுக்கு சொல்லித் தர வேண்டும். மழைநீர் சேமிப்பு தொட்டி அமைத்தல், நீர் நிலைகளை சுத்தப்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபட வேண்டும்.

பொதுவிடங்களில், விழாக்களில் பாட்டிலில் வைக்கப்பட்ட நீரில் சிறிதளவு குடித்துவிட்டு மீதியை பாட்டிலோடு தூக்கி எறிவதை தவிர்க்க வேண்டும். வீட்டின் சுற்றுப்புறம் மற்றும் சிறு சாலைகளில் சிமெண்ட் தரைகளை அமைத்து தண்ணீர் நிலத்தடிக்கு செல்வதை தடுப்பதை தவிர்த்தல், பொதுவிடங்களில் திறந்து கிடக்கும் தண்ணீர் குழாய்களை மூடுதல் போன்றவை கூட தண்ணீர் சிக்கனம்தான்.

மழைநீரை சேமித்து அன்றாட வீட்டு தேவைக்கு உபயோகிக்கலாம். சமையலறை கழிவுநீரை தோட்டத்திற்கு பயன்படுத்தலாம். வாஷிங் மிஷின் கழிவு நீரை கழிவறைக்கு பயன்படுத்தி மறுசுழற்சி செய்வதை ஒவ்வொருவரும் கடமையாகவும், பெருமையாகவும் நினைக்க வேண்டும்.

காற்று மாசுபாடு

காடுகளை அழிப்பது மற்றும் புகையினால் காற்றில் கலக்கும் நச்சு வாயுக்கள் என இரண்டு வகையில் காற்று மாசுபடுகிறது. இருபதாம் நூற்றண்டின் தொடக்கத் திலிருந்து இதுவரை 50 சதவிகித மழைக்காடுகள் அழிந்து விட்டன. மழைக்காடுகளில்தான் உலகின் 70 விழுக்காடு தாவர மற்றும் விலங்கினங்கள் வாழ்ந்து வருகின்றன. ஒரு மரத்தின் சராசரி வயது 50 ஆண்டுகள் எனில் அது ஏறக்குறைய 2700 கிலோ பிராண வாயுவை உற்பத்தி செய்து நம்மை வாழ வைக்கிறது. மேலும், மரங்களிலிருந்து காகிதம், வீட்டிற்குத் தேவையான மரப் பொருட்கள், மருந்துகள் போன்ற சுமார் 5000 எண்ணிக்கையிலான உப பொருட்கள் கிடைக்கின்றன.

ஆனால் தற்போது ஒவ்வொரு நிமிடமும் ஒரு கால்பந்து அளவுள்ள காடுகள் அழிக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலை நீடித்தால் மனிதகுலம் பெரும் இன்னல்களை சந்திக்க வேண்டியிருக்கும். எனவே வனங்களை பாதுகாப்பதும், மரங்களை வளர்ப்பதும்

வாழ்வின் முதன்மையான கடமை

சுற்றுச்சூழல் பாதுகாப்பு



ஒவ்வொரு குடிமகனும் தன் கடமையாக கருத வேண்டும்.

காற்று மாசுபடுவதற்கு மற்றொரு காரணம் எரிபொருளை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவது. இதனால் நச்சு வாயுக்கள் வெளியாகி, புவி வெப்பமாகிறது. காற்று மாசினால் நகரங்களில் வாழும் மக்களிடையே பல்வேறு நோய்கள் ஏற்படும் என கண்டறிந்துள்ளனர் அறிவியல் அறிஞர்கள். புவி வெப்பமயமாதலால் தாவரங்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டு எதிர்காலத்தில் பஞ்சத்தை ஏற்படும் என்று ஆராய்ச்சி முடிவுகள் சொல்லுகின்றன. அதுமட்டுமின்றி மலேரியா, சிக்கன் குனியா போன்ற நோய்கள் அதிகமாக பரவி உலக மக்களை அச்சுறுத்தும் என்கிறார்கள். இத்தனையும் நிகழ்ந்த பின்னும் நாம் மாறாமல் இருப்பதன் பயன் என்ன? எரிபொருளை சிக்கனமாக, தேவைக்கு ஏற்ப பயன்படுத்துவது, காலார நடந்து செல்வது, மிதிவண்டியை பயன்படுத்துவது, மகிழுந்து, வாண வேடிக்கைகளை தவிர்ப்பது, குப்பைகள் எரிப்பதை தவிர்ப்பது போன்ற செயல்களில் நாம் ஈடுபட வேண்டும்.

மண் மாசுபாடு

உலகில் உள்ள உயிர் பன்முகத்தன்மையில் 70 விழுக்காடு இருப்பிடமாக இந்தியா உள்ளது. உலகில் உள்ள தாவரங்களுள் 37% இந்தியாவில் மட்டுமே உள்ளது. மேலும் 372 பாலூட்டிகள், 1228 பறவையினங்கள், 446 ஊர்வன இனங்கள், 4 உலக இயற்கையான பாரம்பரிய சின்னம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை போன்ற மிக பிரமாண்டமான பன்முகத்தன்மை கொண்ட இடமும் உள்ளது.

மண்ணுக்கு உரமிடும் போது நைட்ரஸ் ஆக்சைடு வெளிப்படுவதால், நிலத்தை மட்டுமின்றி காற்றையும் மாசுபடச் செய்கிறது. கான்கிரீட் கழிவுகள். கட்டட கழிவுகளை பொறுப்பற்ற முறையில் ஆங்காங்கே கொட்டுவதால் அங்குள்ள மண் மாசுபடுகிறது. இவைகளைத் தவிர்க்க தேவையான அளவு மட்டுமே பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்துவது, இயற்கை உரங்களை பயன்படுத்துவது, கட்டட கழிவுகளை மறுசுழற்சி செய்வது, அல்லது கட்டிடங்களின் அடிதளத்திற்கு பயன்படுத்துவது போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளலாம்.

பிளாஸ்டிப் பொருட்களால் ஏற்படும் மாசுகளைத் தவிர்த்தல்

பிளாஸ்டிக் பொருட்கள் நம்முடைய வாழ்வில் இரண்டறக் கலந்து விட்டன. காய்கறிகள் வாங்க, பழங்கள் வாங்க, உணவு பண்டங்கள் வாங்க, உடைகள் வாங்க இப்படி எதை வாங்கினாலும் அவைகளை கேரிபேக்கில் வாங்கி வர நாம் பழகி விட்டோம். பயன்படுத்திய நெகிழிப்பைகளை தூக்கி எறிந்து கொண்டிருக்கிறோம். தூக்கி எறியப்பட்ட நெகிழிப்பைகள் மாட்டிற்கும் மற்றும் சில உயிர்களுக்கும் இரையாகிறது. மட்கும் மற்றும் மட்காத குப்பைகளை தரம் பிரிக்க நாம் முன் வருவதில்லை. அதனால் மட்காத குப்பைகள் நிலத்திற்குள் சென்று மண்ணின் வளத்தை பாழ்படுத்துகிறது.

குப்பைகளை தரம்பிரிப்பது, மட்காத குப்பைகளை மறுசுழற்சி செய்வது அல்லது அதன் தேவைகளை குறைக்க முற்படுவது, மண்ணில் மட்காத பொருளை ஒரு நாளும் ஊக்குவிக்காமால் தவிர்ப்பது போன்ற செயல்களை அன்றாட வாழ்வில் நாம் கடை பிடிக்க வேண்டும்.

அடிப்படை கடமைகள்

நாம் அனைவரும் காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் போன்ற இயற்கை சூழலை பாதுகாத்து மேம்படுத்த வேண்டும். நம் முன்னோர்கள் தேவைக்கு அதிகமான நுகர்வை குறைத்து வாழ்ந்து வந்தார்கள். கால்நடைகளும், கால்களும் வேலைகளை செய்தன. உணவு பண்டங்களை வீணாக்குவதை தவிர்த்தார்கள். நாமும் அவர்கள் போல் நிலம், நீர், காற்று மாசுபடாமல் பாதுகாப்பதை ஒவ்வொருவரும் தன் வாழ்வியல் நெறியாக கருதி வாழ வேண்டும். சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்பதை நமது கடமையாகக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

மகளிர் சுய உதவிக் குழுவினரின் பொங்கல் விழா கொண்டாட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், சென்னை நகர மேலாண்மை அலகு மற்றும் நகர அளவிலான கூட்டமைப்பு இணைந்து கிண்டியிலுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலக வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 13.01.2020 அன்று பொங்கல் திருவிழா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களின் விற்பனைக் கண்காட்சி நடைபெற்றது.

இக்கண்காட்சியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இவ்விழாவில் 300 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பங்கேற்ற மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு இடையே கலர் தண்ணீர் நிரப்பும் போட்டி, இசை நாற்காலி போட்டி, எலுமிச்சை தேக்கரண்டி போட்டி ஆகியவை நடத்தப்பட்டன. கோலாட்டம், கும்மியாட்டம் என பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்ற பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இக்கண்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்தப் பொருட்களான செயற்கை ஆபரணங்கள், தரை விரிப்புகள், சணல் கைப்பைகள் மற்றும் உணவுப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி நடைபெற்றது. இதில் 32 சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தனர். அலுவலகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் இக்கண்காட்சிக்கு வருகை தந்து பார்வையிட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்தப் பொருட்களை வாங்கி சுய உதவிக் குழு மகளிரை உற்சாகப்படுத்தினர். இக்கண்காட்சியில் சுமார் ரூ. 50 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இக்கண்காட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு பொங்கல் விழாவினை சிறப்பித்தனர்.

பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள்

காஞ்சிபுரம் மாவட்டம், வெள்ளைக் குளம் தெருவில் பூந்தோட்டம் பகுதி அளவிலான கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பில் 8 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளன. இக்கூட்டமைப்பில் உறுப்பினராக இருக்கும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நிதி மேலாண்மை மற்றும் புத்தகப் பராமரிப்பு பயிற்சி போன்றவை வழங்கப்பட்டதுடன், சுழல் நிதியாக ரூ. 50 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்பின் சார்பில் தொழில் நடவடிக்கையாக தின்பண்டங்களை தயாரித்து விற்பனை செய்யலாம் என்று முடிவெடுத்த அதன் உறுப்பினர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள எட்டு சுய உதவிக் குழுக்களில் இருந்தும் தலா இரண்டு உறுப்பினர்கள் கூட்டமைப்பின் சார்பில் செயல்படும் தொழிலில் ஈடுபடுகின்றனர். ரூ. மூன்று லட்சம் மதிப்பீட்டில் இரண்டு பேக்கிங் இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. பிஸ்கட் போன்ற தின்பண்டங்களை தயாரித்து அதை பேக்கிங் செய்து விற்பனை செய்கின்றனர். இதன் மூலம் தற்போது பூந்தோட்டம் பகுதி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களின் வாழ்வாதாரம் வளர்ச்சி பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முதுமையில் கைகொடுத்த வாழ்வாதார இயக்கம்

விருதுநகர் மாவட்டம், வத்ராயிருப்பு பேரூராட்சியில் வசித்து வருபவர் பஞ்சவர்ணம் (வயது 50) கணவரால் கைவிடப்பட்ட இவருக்கு ஒரு பெண் குழந்தையும் உள்ளது. கூலி வேலை செய்து வரும் இவர் அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு தன் பெண்ணுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார். இந்நிலையில் முதுமையின் காரணமாக வெளியில் சென்று வேலை செய்ய முடியாத சூழல் நிலவிய போது, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் டாக்டர் அப்துல்கலாம் மகளிர் சுய உதவி குழுவில் இணைந்ததின் மூலம் பெண்களுக்கு அரசு வழங்கும் நலத் திட்டங்களைப் பற்றி அறிந்து கொண்டார். இவருக்கு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் தனிநபர் கடனாக ரூ. 50,000/ வழங்கப்பட்டது. இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு தன் வீட்டின் முன்பு சிறு பெட்டிக்கடை ஒன்றை வைத்துள்ளார். தான் வைத்துள்ள கடையில் குழந்தைகளுக்கு பிடித்த மிட்டாய் வகைகள், பிஸ்கட்டுகள், முறுக்குகள், கார வகைகளை விற்று வருகிறார். தற்போது இந்தக் கடையின் மூலம் தினசரி கணிசமான வருவாய் பெற்று, முதுமையில் மற்றவர் துணையின்றி தன்னுடைய வருமானத்தில் வாழ்க்கையை தன்னம்பிக்கையுடன் நடத்தி வருகிறார் பஞ்சவர்ணம். தன்னுடைய வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும், இதற்கு வழிகாட்டிய விருதுநகர் மாவட்ட திட்ட அலுவலகத்திற்கும் தன் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் தந்த நல்வாழ்வு

எனது பெயர் சின்னத்தம்பி (வயது 47, கல்வித் தகுதி 5ம் வகுப்பு), நான் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, வார்டு எண்: 31, அண்ணா நகர் மாரியம்மன் கோயில் தெருவில் வசித்து வருகின்றேன். எனது குடும்பத்தில் 4 நபர்கள் உள்ளனர். நான் ஓசூர் தாலுக்கா அலுவலக சாலை ஓரமாக தள்ளு வண்டியில் வைத்து இனிப்பு, காரம் ஆகிய தின்பண்டங்களை வியாபாரம் செய்து வருகின்றேன். தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத் திட்டத்தின் கீழ் சமுதாய அமைப்பாளர் மூலமாக எனக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர், உதவி திட்ட அலுவலர், சமுதாய அமைப்பாளர் ஆகியோரின் ஒத்துழைப்போடு மானியத்துடன் கூடிய வங்கிக் கடனாக ரூ. 50,000/ (ரூபாய் ஐம்பதாயிரம்) பெற்று, அதை மூலதனமாக வைத்து, தற்போது புதியதாக ஒரு தள்ளு வண்டி உருவாக்கி அதில் இனிப்பு, காரம் ஆகியவைகளை வைத்து வியாபாரம்

செய்கின்றேன். நாளொன்றுக்கு ரூ. 1500/ முதல் ரூ. 2000/ வரை வருமானம் ஈட்டி குடும்பத்தையும், வியாபாரத்தையும் நடத்தி வருகிறேன்.

வங்கியில் பெற்றக் கடனையும் மாதந்தோறும் அசலும் வட்டியுமாக தவணை தவறாமல் செலுத்தி வருகிறேன். தவணை தொகை போக மீதமுள்ள தொகையில் எனது குடும்பத்தையும், வியாபாரத்தையும் சிறப்பாக நடத்தி வருகின்றேன். இந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தந்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– சின்னத்தம்பி

சுய தொழில் மூலம் கிடைத்த வாழ்வாதாரம்

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி நகராட்சியில் வசித்து வரும் நாகலட்சுமி என்பவர் கூலி வேலைக்கு சென்று மிகவும் குறைவான வருமானம் பெற்று வறுமையான சூழலில் வசித்து வந்தார். இந்நிலையில் அப்பகுதியில் செயல்படும் நகர்ப்புற வாழ்வாதாரத்தின் மூலம் நலிவுற்றோருக்கான தனிநபர் கடனாக ரூ. 36,000/ இந்தியன் வங்கியில் பெற்று அத்தொகையை மூலதனமாகக் கொண்டு, மாவு அரைக்கும் அரைவை மில் ஒன்றை துவக்கினார். தற்போது இதன் மூலம் மாதந்தோறும் கணிசமான அளவில் வருவாய் பெற்று வரும் நாகலட்சுமி தனக்கு இந்த வருவாய் போதுமானதாக உள்ளது என்றும், தனது குடும்பத்தின் வறுமை நீங்கி விட்டதும் என்று கூறி தன்னுடைய வறுமையை போக்கிட உதவிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார் நாகலட்சுமி.

நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

என் பெயர் மகாலட்சுமி (த/பெ. வீராசாமி) அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அம்பேத்கர் நகரில் வசித்து வரும் நான், சமுதாய வள ஊக்குனராக (CRP) செயல்பட்டு வருகிறேன். இதுவரை 18 சுய உதவிக் குழுக்கள் மற்றும் 5 சிறப்பு குழுக்களை உருவாக்கி, அவற்றின் உறுப்பினர்களுக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சிகள் வழங்க உதவியுள்ளேன். சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன், சுய உதவிக் குழு மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகள், தொழில் தொடங்க கடன் மற்றும் சாலையோர சிறு வியாபாரிகளுக்கு வங்கிக் கடன் போன்றவை பெற்றுத் தர முயற்சிகளை மேற்கொண்டேன். சமுதாய வள ஊக்குனராக எனது பணியை சிறப்புடன் செய்துள்ளேன். மேலும் குழு நடவடிக்கைகள் மட்டுமின்றி டெங்கு விழிப்புணர்வு, மழை நீர் சேமிப்பு, பெண் கல்வி போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன். மேலும் பெண்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள், திட்டங்கள் போன்றவை குறித்து விளக்கி அரசு நலத்திட்ட உதவிகளைப் பெற்றுத் தந்து வருகிறேன். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு வகையிலும் உதவி செய்யும் பணியை செய்திட எனக்கு வாய்ப்பளித்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

–வீ. மகாலட்சுமி



குளிர்கால நோய்களிலிருந்து நம்மைக் காக்க...

தற்போது குளிர் வாட்டி வதைக்கத் தொடங்கிவிட்டது. சிறுவர்களும் முதியவர்களும் பனியின் தாக்கத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர். மாலை 6 மணி தொடங்கி விட்டாலே சில்லென்று வீசும் காற்றும், இரவில் கொட்டும் பனியால் வெளியில் நடமாடுவதை பலர் தவிர்த்து வருகின்றனர். உடல் நடுங்கும் குளிரால் வாகன ஓட்டிகள் அதிக சிரமத்துக்கு உள்ளாகின்றனர். ஒரு பக்கம் குளிர் வாட்டினாலும், அதனுடன் சேர்ந்து குளிர்கால நோய்களான சளி, இருமல், ஜூரம், ஆஸ்துமா பிரச்னைகளும் ஏற்படுவதால் சிகிச்சைக்காக டாக்டர்களிடம் கூடும் கூட்டம் அதிகமாகவே இருக்கிறது. எப்போதுதான் பனிக்காலம் முடிந்து வெயில் காலம் தொடங்குமோ? என்று சிலர் ஏங்கத் தொடங்கிவிட்டனர்.

குளிர் காலத்தில் ஏற்படும் நோய்கள் பெரும்பாலும் வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது. குளிரால் எந்த நோயும் ஏற்படுவதில்லை. குளிர் காற்றில் இருக்கும் வைரஸ் கிருமிகள் நமது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி செல்களை பாதிப்பதாலே நோய்கள் ஏற்படுகிறது. குளிர்காலத்தில் வைரஸ் கிருமியின் ஆயுள் கொஞ்சம் அதிகமாக இருக்கும். அதாவது, சாதாரணமாக நமது கைகளில் இருக்கும் வைரஸ் கிருமிகள் சுமார் 3 மணி நேரம் உயிருடன் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், வைரஸ் கிருமிகள் எளிதில் மற்றவர்களுக்கு பரவும் அபாயம் உள்ளது. குறிப்பாக கைகளை குலுக்கும்போது, நெருங்கிப் பழகுவதாலும் வைரஸ் கிருமிகள் அதிகம் பரவ வாய்ப்புள்ளது.

எனவே கீழ்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றினால் குளிர்கால நோய்களில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

அடிக்கடி கைகழுவ வைரஸ் எதிர்ப்பு சோப்புகளைப் பயன்படுத்தி கழுவ வேண்டும். வைட்டமின் `சி' சத்துள்ள உணவு பொருட்களை அதிகம் எடுத்துக் கொள்ளலாம். தினமும் சிறிது தேன் குடித்து வந்தால் வறட்டு இருமல், சளி ஆகியவை கட்டுப்படும். பனிக்காலம் தொடங்கியதும் டாக்டர்களின் ஆலோசனைப்படி நோய் எதிர்ப்பு மருந்துகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பனியில் இருந்து காப்பாற்றிக் கொள்ள வெளியில் செல்லும்போது காதுகளில் பஞ்சு அடைத்துக் கொள்ளலாம் அல்லது குல்லா, மப்ளர் பயன்படுத்தலாம். காட்டன் உடைகளை தவிர்த்து, உல்லன் ஸ்வெட்டர் பயன்படுத்தலாம். ஆஸ்துமா பிரச்னை உள்ளவர்கள் இன்ஹேலர் பயன்படுத்தலாம். குளிர்பானங்கள் மற்றும் ஈரம் அதிகம் உள்ள காய்கறிகளை தவிர்க்கலாம். கொதிக்க வைத்து ஆறவைத்த சுடுநீரை குடிக்க வேண்டும்.

குளிர் காலத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு எளிய தீர்வு!

குளிர் காலத்தில் காலை மற்றும் மாலை நேரங்களில் குறைந்த காற்றே இருப்பதால் சுவாச பிரச்னைகள் இருக்கும். குழந்தைகள் மற்றும் வயதானவர்களை சுவாச பிரச்னைகள் எளிதில் தாக்கும். மேலும் சரியான உணவுப் பழக்கம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்களையும் குளிர்கால நோய்கள் உடனடியாக தாக்கும். குளிர்காலத்தில் டான்சில் பிரச்சனையை உண்டாக்கும் கிருமிகளின் வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

எனவே குளிர்ச்சியான உணவுகளை கட்டாயம் தவிர்க்க வேண்டும். பிரிட்ஜில் வைக்கும் உணவுப் பொருட்களை அப்படியே சாப்பிடுவதை தவிர்க்கவும். சாப்பிடுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு வெளியில் வைத்திருந்து நன்றாக சுட வைத்து சாப்பிடவும். ஐஸ்கிரீம், கூல்ட்ரிங்ஸ் ஆகியவற்றையும் தவிர்க்க வேண்டும். பழங்கள் மற்றும் கீரை வகைகளை குறைவாக உணவில் சேர்க்கவும். குளிர் காலத்தில் ரத்தம் உறையும் தன்மை அதிகரிப்பதால் எதிர்ப்பு சக்தி குறைகிறது. இதுவே சளி, இருமல், காய்ச்சல் உள்ளிட்ட பிரச்னைகள் வருவதற்கு காரணம்.

குளிர் காலத்தில் நோய்த்தொற்று ஏற்படும் நபர்கள் உணவு வகைகள் சூடாக எடுத்துக் கொள்வது அவசியம். மசாலா வகை உணவுகள் மற்றும் புரதம் அதிகம் உள்ள உணவுகள் தான் இந்த காலத்துக்கு ஏற்றது. பருப்பு வகைகள், முட்டை, மிளகு சேர்த்த உணவுகள் எடுத்துக் கொள்ளலாம். பாலில் குறைந்தளவு சர்க்கரை மற்றும் மிளகுத்தூள் சேர்த்துக் குடிப்பதன் மூலம் தொண்டை சார்ந்த பிரச்னைகள் குறையும். இதேபோல் நோய் எதிர்ப்பு சக்திக்கு வைட்டமின் `சி' சத்து உள்ள பழங்கள், காய்களை சாப்பிட வேண்டும். ஆரஞ்சு, அன்னாசி, தக்காளி, முட்டைக்கோஸ், கேரட், ஆரஞ்சு மற்றும் மஞ்சள் நிற பழங்கள், காய்கறிகள் சேர்த்துக் கொள்வதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

செல்லியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், எலவம்பட்டி ஊராட்சியில் செல்லியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவானது மொத்தம் 16 உறுப்பினர்களைக் கொண்டு 2014ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்களுக்கு ஊக்குனர் பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் மகளிர் திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிதியில் ரூ. 1,00,000/ மற்றும் வங்கிக் கடன் மூலமாக ரூ. 8,00,000/ பெற்று சணல் பைகள், நகைப்பெட்டி மற்றும் பாய் போன்றவற்றை தயாரிக்கும் தொழில் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை உள்ளூர் சந்தைகள் மற்றும் மாவட்ட செயலாக்க மேலாண்மை அலகு நடத்தி வரும் கண்காட்சிகளில் விற்பனை செய்வதுடன், வெளியூர் வியாபாரிகளும் மொத்தமாக வாங்கிச் சென்று சென்னை, ஐதராபாத் மற்றும் பெங்களூர் போன்ற பெருநகரங்களில் விற்பனை செய்கின்றனர்.

இத்தொழிலினை மேற்கொள்வதன் மூலம் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் சராசாரியாக ரூ. 6,000/ வரை வருமானம் பெற்று, அவர்களின் குடும்ப வாழ்வாதாரம் மேம்பாடு அடைய உறுதுணையாக இருந்து வருகின்றனர். செல்லியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் செயல்பாடானது அப்பகுதியில் உள்ள அனைத்துக் குழுக்களுக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளது.

தையல் இயந்திரம் மூலம் பொருளாதார வளர்ச்சி

என் பெயர் பா. சூரியா (த/பெ. பாண்டி) இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்களம் ஒன்றியம், கூடலூர் ஊராட்சியை சேர்ந்த சூரியங்கோட்டை கிராமத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீ கருப்பர் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறேன். எனது தந்தை திடீரென்று இறந்து விட்டார். இதனால் எனது குடும்பம் மிகவும் வறுமைக்கு உள்ளானது. எனது தாய் தினக்கூலி வேலை செய்து குடும்பத்தை கவனித்து வந்தார்கள். ஒரு தையல் கடையில் வேலைக்கு சேர்ந்து தையல் தொழிலை நன்கு கற்றுக் கொண்டேன். தையல் தொழிலை நன்கு தெரிந்திருந்தும் சொந்தமாக தொழில் செய்ய பணவசதி இல்லை. எனது குழு மூலம் கூட்டமைப்பில் தனிநபர் கடன் பெற்று, ரூ. 25,000/ முதலீட்டில் சொந்தமாக தையல் இயந்திரம் வாங்கி எனது வீட்டின் முன் பகுதியில் தையல் கடை வைத்து தொழில் செய்து, நாள் ஒன்றிற்கு ரூ. 750/ வரை வருவாய் பெற்று வருகிறேன். தற்போது எனது உடல் நலம் குன்றிய தாயையும் கூடவே இருந்து கவனித்து வருகிறேன். எனது குடும்பத்தின் வறுமையும் நீங்கி வருகிறது. எனது வாழ்வில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், திட்ட இயக்குநர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் ஆகியோர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வறுமையைப் போக்கிய வாழ்வாதார இயக்கம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், வைரம்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் என்னுடைய பெயர் க. அமுதா (க/பெ. கணேசன்). நலிவுற்றோர் குடும்பப் பிரிவைச் சேர்ந்த எனக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றனர். கூலி வேலைக்குச் சென்று அதன் மூலம் கிடைக்கும் குறைவான கூலியை கொண்டு மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தேன். எனது குழந்தைகளைக் கூட படிக்க வைக்க முடியாமல் கஷ்டப்பட்டேன்.

இந்நிலையில் எங்கள் பகுதியில் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் வைரம்பட்டி கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு வழங்கும் தனிநபர் கடனாக ரூ. 10,000/ பெற்று பெட்டிக்கடை வைத்துள்ளேன். இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டு என்னுடைய தேவைகளை நானே பூர்த்தி செய்து வருகிறேன். இதற்கு முன்பு என்னுடைய தேவைகளுக்காக அடுத்தவரின் உதவியை நாடி கஷ்டப்பட்டு கொண்டு இருந்தேன். தற்போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் கடன் பெற்று என்னுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்து நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். என்னை வாழ வைத்த கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வளம் தந்த வாழ்வாதார இயக்கம்

எனது பெயர் சுகந்தி (கணவர் பெயர் இளமுருகன்). நான் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரம், அசேஷம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த என்னால் 8வது வகுப்பிற்கு மேல் படிக்க முடியவில்லை. எனது கணவரும் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். நான் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினைப் பற்றி அறிந்து கொண்டு, நானும் எங்கள் பகுதியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவில் இணைந்து செயல்படத் துவங்கினேன்.

எனது குடும்பச் சூழ்நிலை பற்றி அறிந்து கொண்டு, எனது குழுவின் மூலம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் வாயிலாக எனக்கு கடன் பெற்றுத் தந்தார்கள். அந்தத் தொகையைக் கொண்டு, நான் எனது வீட்டின் முன் பகுதியில் தள்ளுவண்டியில் சிறிய அளவில் பலகாரக் கடை ஒன்றினைத் துவங்கினேன்.

சுவையாகவும், சுகாதாரமாகவும் பலகாரங்களைத் தயாரித்து நான் விற்பனை செய்வதால் எனது கடைக்கு நிறைய வாடிக்கையாளர்கள் வருகின்றனர். தற்போது எனக்கு கணிசமான அளவு வருவாய் கிடைக்கிறது. எனது குடும்பத்தின் வறுமையும் நீங்கியுள்ளது. எனது குடும்பத்தின் வறுமையை போக்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



கறவை மாடு வளர்ப்பின் மூலம் பொருளாதார வளர்ச்சி

என் பெயர் ராதிகா, நான் புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், குளந்திரான்பட்டு ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் எங்கள் பகுதியில் செயல்படும் செவ்வந்தி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். நான் கூலி வேலை செய்து வருவதால் வருமானம் போதவில்லை. ஆகையால் எனது பிள்ளைகளையும் தொடர்ந்து படிக்க வைக்க இயலவில்லை. அப்போது நான் உறுப்பினராக உள்ள குழுவின் உறுப்பினர்கள் மூலம் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் வாயிலாக தனி நபர் கடன் வழங்குவதை அறிந்தேன்.

எனவே கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் தனிநபர் கடனாக ரூ. 15,000/ பெற்று என்னுடைய சொந்த பங்களிப்பாக ரூ. 10,000/ செலுத்தி, 25,000 ரூபாயில் கறவை மாடு வாங்கி அதன் மூலம் மாடு வளர்ப்பு தொழில் செய்து வருமானத்தை ஈட்டி வருகிறேன். இதன் மூலம் எனது குழந்தைகளின் படிப்பு மற்றும் குடும்ப செலவையும் எதிர்கொள்ள முடிந்தது. எனது வாழ்வாதாரம் மேம்பட இந்த வாய்ப்பை அளித்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டம்

மகளிரின் வாழ்வில் மாற்றம் தந்த திட்டம்

தமிழ்நாடு அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அத்திட்டங்களில் ஒன்றான பணிபுரியும் மகளிர் தங்களின் பணியிடங்களுக்குச் சிரமமின்றி சென்று வர ஏதுவாக `அம்மா இருசக்கர வாகன மானிய திட்டமும்' ஒன்றாகும். இந்தியாவிலேயே நம் மாநிலத்தில் மட்டுமே செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை பல்லாயிரக்கணக்கான பெண்கள் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களைப் பெற்று பயனடைந்துள்ளனர். பெண்களின் வளர்ச்சிக்கு திருப்புமுனையாக உள்ள இத்திட்டத்தினால் பயனடைந்துள்ள பெண்களின் மகிழ்ச்சியை நாமும் பகிர்ந்து கொள்வோம் வாருங்கள்.

தஞ்சாவூர் மாவட்டம்

என் பெயர் வனிதா (க/பெ. செல்வேந்திரன்), தஞ்சாவூர் மாவட்டம், சூரக்கோட்டை ஒன்றியம், அம்மாகுளம் ஊராட்சியில் வசித்து வரும் நான், சூரக்கோட்டை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் பணிதள பொறுப்பாளராக பணி புரிந்து வருகிறேன். தினமும் வீட்டிலிருந்து தொலைதூரம் நடந்து சென்று பணி தளத்தில் கண்காணிப்பாளராகவும், மதிப்பீடும் செய்து வருகிறேன். வீட்டுப் பணிகளையும், இதர பணிகளையும் முடித்துவிட்டு வேலைக்குச் செல்வது மிகவும் கடினமாக இருந்தது. பணி முடிந்த பின்னர் வீட்டிற்கு வருவதற்கும் மிகவும் சிரமமாக இருந்தது. இந்நிலையில் உழைக்கும் மகளிருக்கானஅம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் என்னை பயனாளியாக தேர்வு செய்து எனக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது நான் மாலை நேரங்களில் பணியினை முடித்து விட்டு வரும்போது ஏற்பட்ட சிரமத்தில் இருந்து விடுபட்டு, என் குடும்பத்துடனும், எனது பிள்ளைகளின் கல்விக்காகவும் சிறிது நேரம் ஒதுக்க முடிகிறது. எனது எதிர்கால சந்ததியினை சிறப்புடன் வழிநடத்த உதவிய நமது தமிழ்நாடு அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டம்

எனது பெயர் ஜக்கம்மாள் (க/பெ. பாஸ்கரன்), நான் தேனி மாவட்டம், கோடாங்கிபட்டி ஊராட்சியை சேர்ந்த தீர்த்தத்தொட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வசிக்கும் ஊரில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். போக்குவரத்து வாகன வசதி அதிகம் இல்லாத காரணத்தினால் தினமும் நான் பணிக்குச் செல்ல மிகவும் சிரமப்பட்டேன். காலையில் சீக்கிரமே எழுந்து வீட்டு வேலைகளை செய்து விட்டு, வேலைக்குச் செல்லும்போது தாமதமாகிவிடும். மாலையில் வேலை முடிந்து வீட்டுக்கு வரும் போது இரவு நேரமாகி விடும். இதனால் எனக்கு கடும் மன உலைச்சல் ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் பணிக்குச் செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் குறித்து தெரிந்து கொண்ட நான் அதற்கு விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எனக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது வீட்டு வேலைகளை முடித்து விட்டு, சரியான நேரத்தில் பணிக்கு செல்வதற்கும், மாலையில் விரைவாக வீடு திரும்புவதற்கும் முடிகிறது. எனக்கு மானிய விலையில் இரு சக்கர வாகனம் வழங்கிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு மிகவும் நன்றி.

தூத்துக்குடி மாவட்டம்

என் பெயர் மகேஷ்வரி, 2ஈ/164பி, முருகேசன் நகர், மடத்தூர் ரோடு, தூத்துக்குடி என்ற முகவரியில் வசித்து வரும் நான், எனது வீட்டில் இருந்த 5 கி.மீ தூரத்தில் உள்ள நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். தினந்தோறும் வேலைக்கு சென்று வருவது சிரமமாக இருந்தது. காரணம் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே பேருந்துகள் இயங்கி வந்ததால் குறிப்பிட்ட நேரத்தில் வேலைக்குச் செல்வதும், திரும்ப வருவதும் கடினமாக இருந்தது. தற்போது இருசக்கர வாகன மானியத் திட்டத்தின் கீழ் இரு சக்கர வாகனம் வாங்கியதற்கு பின்பு நான் பணியாற்றும் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட நேரத்தில் சென்று வர எளிதாக உள்ளது. மேலும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவது, மருத்துவமனைக்குச் செல்வது மற்றும் அலுவலகத்திற்கு செல்வது போன்றவை எளிதாக உள்ளது. என் போன்ற மகளிருக்கு இருசக்கர வாகன மானிய திட்டம் பெரிதும் உதவியாக உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம்

என் பெயர் சுமிலா (க/பெ. ஜெஸ்டிஸ் பாக்கியராஜ்) நான் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சி, வார்டு எண். 28, புதுக்குடியிருப்பு பகுதியில் வசித்து வருகிறேன். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த நான், பகுதி அளவிலான கூட்டமைப்பின் தலைவியாக செயல்பட்டு வருகிறேன். எனது வேலையின் காரணமாக வெளியிடங்களுக்கு ஆட்டோ, பஸ் போன்றவற்றின் மூலமே செல்ல வேண்டியிருந்ததால், குறித்த நேரத்திற்கு செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டேன்.

இந்நிலையில் பணிக்குச் செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் பற்றி தெரிந்து கொண்ட நான், அதற்காக விண்ணப்பித்தேன். எனக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது நாள் எனது இருசக்கர வாகனத்திலேயே அனைத்து இடங்களுக்கும் சென்று, மகளிர் திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, சுய உதவிக் குழுக்கள் அமைத்திட மகளிரை ஊக்கப்படுத்தி வருகிறேன். எனது பணியை மகிழ்ச்சியுடனும், ஊக்கத்துடனும் செய்திட இருசக்கர வாகனம் எனக்கு பெரும் உதவிகரமாக இருக்கிறது. எனக்கு மானிய விலைவில் வாகனம் வழங்கிய தமிழக அரசிற்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



நாமக்கல் மாவட்டம்

எனது பெயர் தமிழ்செல்வி (க/பெ. மாதேஸ்வரன்) நான் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டாரம், கருவேப்பம்பட்டி ஊராட்சி, ஆத்தூராம்பாளையம் குக்கிராமத்தில் வசித்து வருகிறேன். திருச்செங்கோடு ஒன்றியத்தில் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி வரும் எனக்கு 4 ஊராட்சிகளில் உள்ள 4 வங்கிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தினமும் 15 கிலோ மீட்டர் தூரம் பேருந்தில் சென்று வந்தேன். இதனால் குறிப்பிட்ட நேரத்திற்கு வேலைக்குச் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். தற்போது இருசக்கர வாகன மானியத் திட்டத்தின் மூலம் ரூ. 25,000/ மானியம் பெற்று, இருசக்கர வாகனம் வாங்கியுள்ளதால் வங்கிகள் மற்றும் குக்கிராமங்களுக்கு சென்று வர மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதனால் குறிப்பிட்ட நேரத்திற்கு வங்கிக்கும் கிராமத்திற்கும் சென்று எனது பணியை விரைவாக செய்ய முடிகிறது. இதற்கு காரணமான தமிழக அரசிற்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், இத்திட்டத்தின் மூலம் என்னை பயனடையச் செய்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில்

பொங்கல் விழா

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகை, சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்திலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் வாயிலில் பொங்கலிடப்பட்டதைத்

தொடர்ந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்ட விளையாட்டுப் போட்டிகள், பாட்டு, நடனம், கவிதை போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ஊரக புத்தாக்கத் திட்டத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமைப்பு SMART PORTAL குறித்த பயிற்சிப் பட்டறை

வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமைப்பு பகுதியின் கீழ் உதவி திட்ட அலுவலர்கள், கணினி வல்லுநர் மற்றும் சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோருக்கு 'SMART PORTAL' குறித்து ஆறு நாட்கள் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் 32 மாவட்டத்திலிருந்து 96 நபர்கள் கலந்து கொண்டனர்.

'SMART PORTAL' இயக்கும் முறை, அறிக்கை தயாரித்தல், புள்ளி விவரங்களை சேகரித்தல், பயிற்சி நிறுவனம் மற்றும் பயிற்சிக் கூடங்களை பதிவு செய்யும் முறை போன்றவை குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறையில் தேசிய திறன் வளர்ப்பு மேம்பாட்டு கழக பயிற்றுனர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சிப்பட்டறையை கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. செல்வராஜ் அவர்கள் துவக்கி வைத்தார். மாநில வல்லுனர் திரு. எஸ். நித்தியானந்தம் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

அறிந்து கொள்வீர்..!

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டம்!

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் உள்ள 3994 ஊராட்சிகளில் தொழில் முனைவோர்களை உருவாக்க ஒவ்வொரு மாவட்டங்களிலும் முன்னுரிமை பெற்ற பொருட்களை / தொழில்களை அடையாளம் காணுதல் அடிப்படையில் மாவட்ட அளவிலான பகுப்பாய்வு தயார் செய்யப்பட்டு, மேலும் இதன் தொடர்ச்சியாக அந்தந்த ஊராட்சிகளில் உள்ள தொழில் வாய்ப்புகளைக் கண்டறிய மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ஊராட்சி அளவிலான ஆலோசனைக் கூட்டங்களில் கிடைக்கும் படிப்பினைகள், மதிப்புத் தொடர் ஆய்வுகள், மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி போன்றவற்றின் மூலம் சூழல் மேம்பாட்டுடன் கூடிய ஊரகத் தொழில் முனைதலுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து சமுதாயத்தின் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டம் தயாரிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தனிநபர் தொழில்கள் (நுண், குறு மற்றும் சிறு தொழில்கள்) மற்றும் கூட்டுத் தொழில்கள் (உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் நிறுவன குழுக்கள் மற்றும் கூட்டு உற்பத்தியாளர் குழுக்கள்) போன்றவை அடையாளம் காணவும், ஊக்குவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் கிராமம், வட்டாரம், மாவட்ட மற்றும் மாநில அளவில் தயார் செய்யப்படும்.

கிராம அளவிலான திட்டமிடுதலின் மூலம் அக்கிராம மக்கள் பங்கேற்று, திட்டமிடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு கண்டறியப்பட்ட பொருள்கள் மற்றும் சார்புத் தொழில்கள் அக்கிராமத்தில் உள்ளனவா என்றும், அவை மூலம் தொழில் முனைதல் மேம்பாட்டிற்கான வாய்ப்புள்ள சாத்தியக் கூறுகள் ஏதேனும் உள்ளனவா என்றும் மதிப்பிடுவார்கள். இச்செயலானது சமூக வல்லுநர்களையும் மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சி அளவில் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்பு பிரதிநிதிகளையும் கொண்ட 7 நபர்களைக் கொண்ட குழுவால் மேற் கொள்ளப்படும் (3 சமூக வல்லுநர்கள், 1 சுய உதவிக் குழு பிரதிநிதி, 1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கப் பிரதி நிதி, 1 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (மகளிர்) பிரதிநிதி மற்றும் 1 கிராமத்தில் உள்ள தொழில் முனைவோர்).

இக்குழுவில் சமூகவல்லுநர்களைத் தவிர மற்ற பிரதி நிதிகள் அந்தந்த ஊராட்சி அளவில் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். சமூக வல்லுனர்களில் ஒருவர் மிஷன் அந்தியோதயா கைபேசி செயலி மூலம் கணக்கெடுப்பு செய்தவராகக் கட்டாயம் இருக்கவும், மேலும் குறைந்தது 4 பெண் பிரதிநிதிகள்இருப்பதையும், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளதையும் வட்டார திட்ட செயலாக்க அலகு (BPMU) உறுதிப்படுத்த

வேண்டும். மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டக் குழுவினர் தாங்கள் பெறும் தகவல்களை கைபேசி செயலி மூலம் (Mobile application) பதிவேற்றம் செய்யும் கைபேசி செயலி போன்ற தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் மூலம் இக்கூறின் முழுமையான வெளிப்படையான அறிக்கைகள் மற்றும் புள்ளிவிபரங்கள் கிராம, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் அறிவதற்கு வழிவகை செய்யப்படுகிறது.

ஒவ்வொரு ஊராட்சியிலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டமானது சமுதாய மக்களுக்கு விளக்கப் பயிற்சி அளித்தல், தகவல் சேகரித்தல் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கான நடைப்பயணம் மேற் கொள்ளுதல், உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடல், தொழில் முனைவோர்களுடனான கலந்துரையாடல், சமுதாயம் சார்ந்த அமைப்பு நிர்வாகிகளுடன் கலந் துரையாடல், இளைஞர்களுடனான கலந்துரையாடல் போன்றவை அதிகபட்சமாக 12 நாட்களுக்குள் முடிக்கப்பட்டு அதன் அறிக்கையை கிராம முதலீட்டு திட்டம் (Village Investment Plan) சமர்ப்பிக்க வேண்டும்

இதன் தொடர்ச்சியாக விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள நான்கு வட்டாரங்கள் கண்டறிந்து ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு கிராம ஊராட்சியைத் தேர்வு செய்து அக்கிராமத்தில் வளர்ச்சி திட்டம் தயார் செய்யத்

தெரிவிக்கப்பட்டது. கோலியனூர் வட்டாரத்தில் பிடாகம், விக்கிரவாண்டி வட்டாரத்தில் வி.சாலை, காணை வட்டாரத்தில் கோழிப்பட்டு மற்றும் முகையூர் வட்டாரத்தில் சடகட்டி ஆகிய நான்கு ஊராட்சிகளில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

மேற்கண்ட நிகழ்வின்போது மாநில அலுவலகத் திலிருந்து இணை இயக்குநர் திருமதி. மதுமதி அவர்கள் வி.சாலை ஊராட்சிக்கு வருகை புரிந்து அக்கிராம மக்களுடன் கலந்துரையாடினார். அக்கிராமத்தில் உள்ள விவசாயிகள், தொழில் முனைவோர், சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள் தங்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் இதர தேவைகளை அந்த கலந்துரையாடலில் தெரிவித்தனர். அதன் மூலத் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயார் செய்யப்பட்டது.

இதுபோன்று ஊரகப் புத்தாக்கத் திட்ட மாவட்டங்களில் உள்ள அனைத்து முதற்கட்ட ஊராட்சி களிலும் / கிராமங்களிலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்புக் குறித்த ஒருநாள் பயிற்சி விளக்கக் கூட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில் பயனாளிகளை ஒருங்கிணைப்பதில் சமூக மற்றும் நிதி உள்ளாக்கங்களைப் போலவே அவர்கள் தேர்ந்தெடுக்கும் அல்லது செய்து கொண்டிருக்கும் தொழிலில் அல்லது உற்பத்தியில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக் கட்டமைப்பு அவசியமான ஒன்றாக இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு முதல்கட்டமாக, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் அனைத்து மாவட்ட செயல் அலுவலர்கள், இளம் வல்லுநர்கள் மற்றும் செயல் அலுவலர் (திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்) ஆகியோருக்கான ஒருநாள் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்புக் குறித்த ஒருநாள் பயிற்சி விளக்கக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டமானது ஹோட்டல் பார்க் எலான்ஜா, நுங்கம்பாக்கத்தில், 2020 ஜனவரி மாதம் 7 ஆம் தேதி அன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வானது தமிழ்நாடு ஊராகப் புத்தாக்கத் திட்டத்தின் கூடுதல் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. A. அருணா அவர்கள் வரவேற்புடன் துவங்கியது. தொடர்ந்து நிகழ்வின் நோக்கத்தினையும், நிகழ்வு குறித்த கருத்துரைகளையும் திரு. J. சம்பத், முதன்மை செயலாக்க அலுவலர் அவர்கள் வழங்கினார்.

காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த மாவட்ட செயல் அலுவலர்கள் தங்களுடைய மாவட்ட பகுப்பாய்வு அறிக்கையில் இருந்து மாவட்டத்தின் பின்னணியையும், இயற்கை வளங்கள் மற்றும் கண்டறியப்பட்ட முக்கிய தொழில் துறைகளையும், மாவட்டத்தில் அத்தொழில்கள் மூலம் எதிர்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்புகளையும், அதற்கான தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினர்.

அதனைத் தொடர்ந்து உலக வங்கியின் மற்றொரு பிரதிநிதியான மதுஸ்ரீ பானர்ஜி அவர்கள் சமூக உள்ளாக்கம், பாலினத் இடர்பாடுகளைக் குறைக்கும் வழிவகைகள் மற்றும் கருத்து வேற்றுமைகளுக்குத் தீர்வு காணுதல் குறித்த விளக்கங்களை அளித்தார். திட்டத்தில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், நிலைகளைப் பயன்படுத்தும் வழிமுறைகள் மற்றும் நிலம் மற்றும் சமூகத்தினை கண்காணிப்பதிலான இணக்கம் ஆகியவற்றை முதல்நிலை ஆய்வு மற்றும் மத்திய ஆய்வு வழிமுறைகள் மூலம் கொண்டு வரும் வாய்ப்புகளை விளக்கினார்.

ரோப் இந்தியா நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திரு. ஸ்ரீஜித் அவர்கள் வாழை நார், சணல், கோரை போன்றவற்றைக் கொண்டு ஊரகப் பகுதிகளில் சுற்றுச் சூழலுக்கு சாதகமான தொழில்களையும், தொழில் சார்ந்த செயல்பாடுகளையும் செய்வது குறித்து பகிர்ந்து கொண்டார். மேலும், சரியான தகவல் தொழில்நுட்ப வசதிகள், மூலப்பொருட்கள், சந்தைப் படுத்துதலில் நுட்பங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதினால் கிடைக்கும் வாய்ப்புகளையும் குறித்து விளக்கினார்.

உலக வங்கி பிரதிநிதி வனிதா கொம்மு அவர்கள் பசுமைத் தொழில்கள் மற்றும் பசுமை அட்டவணைகள்

குறித்துத் தொழில்கள் சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்துவதாக இருந்தால்அவற்றை பசுமை நிலைக்கு கொண்டு வருவதற்கான வாய்ப்புகளை விளக்கினார். இதனைத் தொடர்ந்து பங்கேற்பாளர்கள் 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒருமாதிரி கதை வழங்கப்பட்டு அதனை சுற்றுச்சுசூழல் மற்றும் சமூக மேலாண்மை அடிப்படையில் தர ஆய்வு செய்து அதனை பசுமை தொழில்வாய்ப்பு அல்லது பசுமை அட்டவணையில் உள்ள வாய்ப்புகள் மற்றும் கதையில் வழங்கப்பட்டுள்ள சுற்றுச்சூழலுக்கும் சமூகத்திற்கும் தீவிர பாதிப்பினை ஏற்படுத்தும் காரணிகளை வகைப்படுத்தி அதனைத் தடுப்பதற்கான வாய்ப்புகளும் பங்கேற்பாளர்களால் பகிரப்பட்டது.

நிகழ்ச்சியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு குறித்த ஒருநாள் பயிற்சி விளக்கக் கூட்டத்தில் கற்ற விஷயங்களை பகிர்ந்து கொள்ளவும், மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்புக் குறித்து விஷயங்களையும் கருத்தில் கொண்டு பசுமை தொழில் வாய்ப்புகளையும் கண்டறியவும் வழிவகை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

வறுமையொழிப்பும், சுய உதவிக் குழுக்களும்...

நம் நாட்டில்,
வறுமையொழிப்பு எனும் முழக்கம்
ஆண்டாண்டு காலமாய் ஒலிக்கும் – அரசின்
திட்டங்களும், சட்டங்களும் என்றும்
ஆதை நோக்கியே இருக்கும்;
ஆயிரம் விண்மீன் வானிலிருந்தும்
சூரிய ஒளியே ஜொலிக்கும்
வறுமையொழிப்பில் மகளிர் குழுக்களே
என்றும் தலையாய் இருக்கும்.

ஊர்கள்தோறும் குழுக்கள் அமைத்து
மகளிரையெல்லாம் ஒன்று சேர்த்து
சேமிப்பு, சிக்கனம் நன்மைகள் கூறி
நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட திட்டம்;
வறுமையொழிப்புச் சங்கங்கள்அமைத்து
ஏழையெளிய மக்களை அறிந்து
அரசின் உதவியை அள்ளி வழங்கி
சமூகப் பொருளியல் மாற்றும் திட்டம்.

ஆசையைக் குறைத்து, சேமிப்பைப் பெருக்கி
திறன்களை வளர்த்துத் தொழில்களைச் செய்து
பொருளினையீட்டி குடும்பத்தை உயர்த்தும்
பெருமைத் திட்டம் மகளிர் திட்டம்;
மாற்றுத்திறனும், மனநோயும் கொண்டு
ஆற்றவொண்ணா துயரில் வாழும்
ஆயிரமாயிரம் மக்களுக்கு உதவி,
அவர்கள் வாழ்வையும் உயர்த்தும் திட்டம்;

அலைகளைப் போல ஓசையிடாது
ஆழ்கடல் முத்தாய் உருமாறும்
அரும்பாடுபட்டு கிராமப்புறங்களின்
வறுமையை நீக்கிட வழிதேடும்
தன்னம்பிக்கையும் சுயமரியாதையும்
நாளும்பொழுதும் தான் வளர்த்து
பெண்ணியவாதிகள் வியந்து போற்றிட
உயர்ந்தது குழுக்களின் செயல்பாடும்

அரசின் உதவியும் வங்கிக் கடன்களும்
முறையாய் தொழில் செய்ய ஊக்கம் தரும்
இருள்போல் படர்ந்த வறுமை நீங்கி
குழுக்களின் வாழ்வில் மாற்றம் வரும்
நாடும் வீடும் வளம் பெற்று உயர
எல்லா நிலையிலும் உழைப்பைத் தரும்
ஓடும் நதியாய் ஓசைக்காற்றாய்
குழுக்கள் இயங்க வளமை வரும்

கிராம சபையோ உள்ளாட்சி அமைப்போ
எங்கும் இருக்கும் மகளிர் குழு;
ஆற்றல் வளர்ப்பையும் வறுமையொழிப்பையும்
கண்ணாய்க் கொண்டஅருமைக்குழு;
அரசியல் தலைவர்கள், ஆன்றோர், சான்றோர்
மகிழ்ந்து போற்றும் உரிமைக்குழு;
உலகெங்கும் வாழ்த்த உயரே உயரே
பறக்கட்டும் இந்த உதவிக் குழு...!

● ஜா. சம்பத்,
திட்ட முதன்மை
செயலாக்க அலுவலர்
தமிழ்நாடு ஊரகப்
புத்தாக்கத் திட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மாவட்ட அளவிலான தொழில் பகுப்பாய்வுப் பணிக் கூட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் தற்போதுள்ள வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா தொழில் வாய்ப்புகள் மற்றும் புதிதாக மேற் கொள்ள வாய்ப்புள்ள தொழில்களைக் கண்டறி வதற்காக ஒருங்கிணைந்த அணுகுமுறை மற்றும் திட்டமிடுதல் அனைத்து திட்ட மாவட்டங்களிலும் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இதன் ஒருபகுதி யாக மாவட்டஅளவிலான தொழில் பகுப்பாய்வு (District Diagnostic Study) குறித்த அறிக்கை தயார் செய்யும் பணி அனைத்து திட்ட மாவட்டங்களிலும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான தொழில் பகுப்பாய்வு என்பது மாவட்டத்தில் கண்டறியப்பட்ட வேளாண் பொருட்கள் மற்றும் தொழில்கள் மூலம் சத்தியமுள்ள பல்வேறு வேலைவாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றுள் மதிப்புத் தொடர் வாய்ப் புள்ள பொருட்களை, தொழில்களை முன்னுரிமைப்படுத்துவது ஆகும். இந்த ஆய்வானது மாவட்டத்தில் உள்ள துறைத்தலைவர்களுடன் நேரடி கலந்தாய்வு மற்றும் கள ஆய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவைகளை ஆவணப்படுத்தி, அதனை அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட பகுப்பாய்வு அறிக்கையாக (DDR) தயாரித்து மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அனைத்து துறைத் தலைவர்களோடு இத்தகவலினை பகிர்ந்து புத்தக அறிக்கையாக வெளியிடப்படும். இது தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தினைச் செயல்படுத்தப்படும் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளபட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக திருநெல்வேலி மாவட்டத்தில் 03.01.2020 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், இ,ஆ,ப., அவர்கள் தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய் துறை, வங்கியாளர்கள், புள்ளியியல் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, பால்வளம், தொழில் துறை, சிறு தொழில் மேம்பாட்டு துறை மற்றும் இதன் தொடர்புத்துறை அலுவலர்களுக்கு ஒருநாள் விளக்கக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரகப் புத்தாக்கத் திட்ட முதன்மை செயலாக்க அலுவலர் திரு. ஜா. சம்பத் மற்றும் துணை செயலாக்க அலுவலர் திரு. ம. ஜெய்கணேஷ் ஆகியோர் திட்ட விளக்க உரையற்றினர். பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாவட்ட பகுப்பாய்வு அறிக்கையினை வெளியிட்டார். இதனைப் போன்று காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் உட்பட திட்ட மாவட்டங்களிலும் மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை வெளியிடப்பட்டது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் பொங்கல் விழா

சேலம் மாவட்டம் அயோத்தியாப்பட்டிணம் ஒன்றியத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் உடையாப்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் பொங்கல் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கூட்டமைப்பு அலுவலகத்தின் வாயிலியில் வண்ணக் கோலமிட்டு, பொங்கலிட்டு மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு, 'பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம்' என்ற தலைப்பில் கூட்டமைப்பின் சார்பில் கோலப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (76,000 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

"எங்கள் வாழ்வும், எங்கள் வாழ்வாதாரமும்,
எங்கள் கையில் என சங்கே முழங்கு!"

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் மூலம்,
நகர்ப்புற ஏழை, எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக
பல்வேறு திட்டங்களைத் தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது
பெருமைக் குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

Goverment Of India

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ்

கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம்

100%

வேலைவாய்ப்புக்கு

044-3047 8047

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

DEEN DHAYAL UPADHYAYA GRAMEEN KAUSHALYA YOJANA (DDU-GKY)
TAMIL NADU STATE RURAL LIVELIHOODS MISSION,
Tamil Nadu Corporation for Development of Women,
Mother Theresa Womens Complex - 3rd floor, Valluvar Kottam High Road,
Nungambakkam, Chennai - 600 034. Phone : 91-44-2817 3415
E-mail : ddugkytn2016«gmail.com / cooddugkytn«gmail.com